JET1-1-TA

# தாங்கமுடியாத வேதனையை, இயலாமையை வியாதியை எதிர்கொள்ள தேவன் உங்களுக்கு எங்ஙனம் உதவிடுவார் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில்: கடுமையான வேதனையில் இயலாமையில் அந்த வருத்தத்தை கையாள தேவன் எப்படி உதவிடுவார்.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:** இயேசு கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாக இருக்கும் அமெரிக்கர்கள், நாம் தவறாக நினைத்து கொண்டிருக்கிறோம். அதாவது இதை செய்தால், மாறாக தேவன், மேலானதை செய்திடுவார் சிறந்ததை நேர்த்தியானத்தை, புதியதை, நல்ல, ஆரோக்கியத்தை, செழிப்பை, தருவார் என்றெண்ணுகிறோம். குறிப்பாக நீங்கள் உபத்திரவத்தில் இருக்கும் போது நினைத்திடலாம், வேதனை ஊடாக போய்க்கொண்டிருக்கலாம்.

ஜோனி எரிக்சன் டாடா: எனக்கு பயமா இருந்தது. தண்டு வடம் காயமடைந்திருக்கிறது என்று முணுமுணுக்கும் சத்தத்தை கேட்டேன், 4 மூட்டுகள் உடைந்தது, முடக்குவாதம், கழுத்து உடைந்துவிட்டது, ரொம்பவும் அச்சத்தோடு இருந்தேன்.

**அறிவிப்பாளர்:** என்னுடைய விருந்தினர்கள் ஜோனி எரிக்சன் டாடா, நிறுவனர் ஜோனி மற்றும் நண்பர்கள் அமைப்பு", ஊனமுற்றவர்களுக்கான அகில உலக சர்வதேச ஊழிய அமைப்பு. இவர்கள் 70துக்கும் மேற்ப்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறார், தினமும் வானொலியில் ஒளிபரப்பாகும் ஜோனி மற்றும் நண்பர்கள் நிகழ்ச்சியின் பேச்சாளர் இரண்டாம் நபர், Dr. மைக்கேல் எஸ்லே, மூடி வேதாகம கழகத்தின் முதன்மை தலைவராக இருக்கிறார். மைகேல் சிறந்த எழுத்தாளரும் ப்ரன்ட்வுட்டில் பெல்லோஷிப் பைபிள் திருச்சபையின் போதகராயிருக்கிறார், டேனன்சீ. இன்றைய விசேஷித்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு அருமையான செய்திகளை பார்க்க இருக்கிறோம். இன்று இரண்டு அற்புதமான விருந்தினர்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள். நமுடன் ஜோனி எரிக்சன் டாடா இருக்கிறார், அதோடு Dr. மைகேல் எஸ்லே இருக்கிறார். நேயர்களே, இன்றைக்கு உபத்திரவத்தை குறித்து பார்க்க இருக்கிறோம். ஜோனி, நம்மை சுற்றி இருக்கிறவர்கள், இதை கேட்டுக்கொண்டிருக்கிற நேயர்களை பலரும், உபத்திரவத்தோடு இருக்கிறார்கள். நம்முடைய நேயர்களில் சிலர் தீராத புற்றுநோயின் வேதனையில் பாதிக்கபட்டிருக்கலாம். அல்லது அவர்களுக்கு கடுமையான இருதய

பிரச்சனை இருக்கலாம். அவர்கள் ஒற்றை தலைவலியால் அவதிபட்டுக்கொண்டிருக்கலாம். ஒருவேளை முடக்கு வாதத்தோடு இருக்கலாம். சிலர், உங்களை போல, தண்டுவடம் பிரச்சனையின் விளைவால் வாதநோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம், அல்லது வேறுவிதமான வியாதிகள் இருக்கலாம். வேறுசிலர், சர்க்கரை நோயின் காரணமாக, தங்கள் கைகள் கால்கள் எடுக்கப்பட்ட நிலையில் இருக்கலாம். சிலர், உங்க அம்மா மாதிரி, லூ ஜிகேர், அலஸ் வியாதியினால், நடக்கவும் பேசவும் முடியாமல் இருக்கலாம்.

அவங்க சொல்கிற விஷயம் என்னன்னு கேட்டீங்கன்னா, "ஜோனி, என்னால் இதுக்கு மேல தாங்க முடியாது. எதற்காக தேவன் என்ன இப்படி கஷ்டப்பட வைக்கிறார்? என்னுடைய பிரச்சனைகளை தேவன் பார்த்துகொள்வாரா? எதற்காக இதை அனுமதித்தார் என்கின்றனர்." சரியா? உங்களுக்கு எதிர்பாராத விபத்து ஏற்ப்பட்ட போது இதே வார்த்தைகளைத்தான் நீங்களும் சொல்லிக்கொண்டிருந்தீர்கள். இப்ப நீங்க நாற்ப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு பின்னால் 1967ற்கு, திரும்பி போகலாம், எங்களுக்காக அதை நீங்க சொல்லணும். உங்களுக்கு சம்பவித்ததை ஜனங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். என்ன நடந்தது? நீங்க எதற்காக இந்த சர்க்கார நாற்காலியில் உட்கார வேண்டியிருந்தது? நீங்க சுறுசுறுப்பான 17 வயது வாலிப பெண்ணாக இருந்தீங்க, குதிரை சவாரியில் தேறினவர், நன்றாக சுடும் பயிற்சி பெற்றவர்.

உங்களுக்கு வெளியில் இருப்பது ரொம்பவும் பிடிக்கும், திடீரென்று இனி ஒருகாலும் எழுந்து நடக்க முடியாது என்ற நிலைக்கு நீங்கள் ஆளாக்கப்பட்டீர்கள். எப்படி நடந்தது?

**டாடா:** சரி, நீங்க எல்லாவிதமான வியாதிகளின் பெயர்களையும் சொன்னதுல எனக்கு சந்தோஷம், ஏன்னா இந்த கேள்விகள் சக்கர நாற்காலில் இருப்பவர்களுக்கு மட்டும்தான் வரும் என்று கிடையாது. சிறு பெண்ணாக பலவித அச்சங்களை நான் சந்தித்திருக்கிறேன். நா விளையாட்டு வீராங்கனை, சந்தோஷமா, சுற்றி திரிந்து, என்னுடைய கல்லூரி நாட்களுக்காக காத்திருந்தேன். என் சகோதரி கேத்தி, நாங்க இருண்டு பாரும் ரொம்ப குளோஸ், அதனால கல்லூரியில் சேர்வதற்கு முன்பு இரண்டு பேரும் ஒன்றாக நேரத்தை செலவிட திட்டம் பண்ணி கடற்கரைக்கு போக தீர்மானித்தோம்.

அதனால கடற்கரைக்கு போனோம். நா தண்ணீக்குள்ள போனேன், நா நீந்தி நீந்தி கரைக்கு அப்பால் 20 முழம் இருக்கும் தெப்பத்திற்கு அருகில் நீந்திகொண்டிருந்தேன், சிறுவர்கள் குதிப்பதையும் டைவிங் செய்வதை பார்த்துக்கொண்டிருந்தேன், எதை பற்றியும் அப்ப யோசிக்கவே இல்ல. ஒரு வீராங்கனையாக, அந்த ஆழத்தை கூட நா தொடவில்லை, அதனால அந்த தண்ணீரின் ஆழம் எனக்கு சரியாக தெரியாது. அந்த தெப்பத்திற்கு மேல் நின்றுகொண்டு நல்லா ஆழமா மூச்ஹ்சு கூட விடாம, சட்டுன்னு தண்ணீல குதிச்சுட்டேன். அந்த நேரத்துலயே, என்னுடைய தலை கடுமையான ஒன்றில் மோதியது, என் பின்னங்கழுத்து முறிந்தது, என்னுடைய முதுகெலும்புகள்

நொறுங்கினது, தண்டு வடம் பாதிப்படைந்தது. என்ன நடந்துதுன்னு எனக்கு முதல்ல ஒன்னும் தெரியல. நா தலை கீழா தண்ணிக்குள்ள போறதும் மூச்சு திணறல் உண்டாகறது மட்டும்தான் எனக்கு தெரிந்தது.

எனக்கு ஒன்றும் புரியல, ஆனா என் சகோதரி கேத்தி, அவங்க முதுகுக்கு பின்னால நீந்திக்கிட்டு இருந்தாங்க. கரையை நோக்கி போயிட்டு இருந்தாங்க. அவங்க கரையில் நடக்க முயன்றார்கள். ஆனா அப்ப ஒரு நண்டு அவங்கள கடிச்சிருச்சு. அதனால நிலை தடுமாறி தண்ணீல இருந்த என் பக்கமாக திரும்பி கூப்பிட்டு, "ஜோனி, நண்டுகள் இருக்குன்னாங்க." நா இன்னும் தண்ணீல முகங்குப்புற மூச்சு தினரீட்டு இருந்தேன், இந்த நண்டு அவங்க கவனத்த திருப்பினது. என்னோட முடிய பார்த்தாங்க. ஏதோ தப்பா இருக்குன்றத புரிஞ்சுகிட்டு, என்னிடமாக சீக்கிரமா நீந்தி வந்தாங்க. நா மூழ்க துவங்கின அந்த நேரத்தில், தண்ணீருக்குள் போக இருந்த என்னை, நெஞ்ஜோட சேர்த்து அனச்சுகிட்டு தண்ணீரிலிருந்து வெளியே கொண்டு வந்தாங்க. அப்ப என்னுடைய தலை அவங்க நெஞ்ஜோட சேர்ந்திருந்தது. ஆனா அந்த நேரத்துல என்னுடைய கரங்கள் அவங்க தோள்மேல வீசப்பட்டது, தொங்கீட்டிருந்தது, என்னால் அதை உணரமுடியல. தனியா பிரிந்து இருப்பதுபோல் இருந்தது. அது வேறு யாரோவோட கை மாதிரி இருந்துச்சு. அது என்னோடது கிடையாது. இது ஏன்னா, கேட்ட கனவா? அந்த நேரத்துல எதுவுமே எனக்கு புரியல, ஆனா வாதம் என்றால்

எப்படியிருக்கும் என்பதை நான் முழுமையாக அனுபவித்துகொண்டிருந்தேன்.

சரி, அவங்க என்ன இந்த தெப்பத்துல வைத்து, கரைக்கு இழுத்துட்டு வந்தாங்க, ஆம்புலேன்ஸ்க்கு போன் பண்ணாங்க, உடனடியா மருத்துவமனைக்கு கொண்டு வந்தாங்க, என்னுடைய நீச்சல் உடையை எடுத்துட்டாங்க, அடுத்த நொடியே என்னை சுற்றிலும் டாக்டர்களும் நர்சுகளும் கூட்டமா சூழ்ந்துகொண்டார்கள். என்னுடைய தலையை மொட்டை அடித்தாங்க. மண்டையோட்டில் துளைகள் போட்டாங்க. என்னோட மண்டையில சில போல்ட்டுகளை போட்டாங்க. என்ன இந்த ஸ்ட்ரைகர் பிரேமில் வைத்தார்கள், இந்த நீளமான கேன்வாஸ் சேன்வேட்ஜ், என்னுடைய கழுத்துக்கு கூடுமான கனத்தை குடுத்து அதை நீண்டு வரும்படி செய்வாங்க. என்னோட யோசனை எல்லாம், நா வீட்டுக்கு போகணும். நா வீட்டுக்கு போக விரும்புகிறேன். எனக்கு ரொம்ப பயமா இருந்துச்சு. சில முணுமுணுப்புகளை நா கேட்டேன் தண்டு வடம் காயமடைந்திருக்கு, மூட்டு வாதம், முடக்குவாதம், கழுத்து முறிவு என்றார்கள்.

இந்த வார்த்தைகளை கேட்ட போது ரொம்பவும் பயந்தேன். திடீரெண்டு வாழ்க்கையே முற்றிலுமா... மாறிப்போயிடுச்சு. அதை நீங்க எதிர்பார்க்கவே இல்லை, அதற்கு தயாராகிட முடியாதே. ஆனா உபத்திரம் வேதனை என்றால் அது முற்றிலுமான மாற்றத்தை உண்டாக்கி விடும். அந்த வார்த்தையின் அர்த்தம் என்னன்னு எனக்கு

அப்ப புரியல. இதற்கு என்ன அர்த்தம் என்று அறிந்துகொள்ள விரும்பினேன், ஆனா இதிலிருந்து என்னோட வாழ்க்கை முற்றிலும் மாறிப்போயிருக்கும் என்ற நிலை உண்டானது அதுதான் முதல் முறை, வித்தியாசமாய் இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** இப்ப உங்கள பார்க்கிறவர்கள் உங்களிடம் சொல்லுகிறார்கள், "நீங்க கவனத்தி ஈர்க்கும் வகையில், அழகா இருக்கீங்க. ஆனா ஜோனி வியாதி என்னை எப்படி ஆக்கியிருக்குன்னு பாருங்க. நா கவர்ந்திழுக்கும் அழகா இல்ல, ஜனங்க என்ன திரும்பிகூட பார்க்க விரும்பல." இவங்களுக்கு நீங்க என்ன சொல்றீங்க?

**டாடா:** சரி, சிலர் என்ன பார்த்து சொல்லியிருக்காங்க என்னன்னா, "வெல், நீ பார்க்க நல்லாதா இருக்க, ஜோனி." ஆனா அதற்கு சிகை அலங்காரங்களையும் ரெவ்லான் அப்பறம் கோல்டன் பிரான்ஸ் லிப்ஸ்டிக் மஸ்காரா கையிலயே வைத்திருந்தா இதெல்லாம் நடக்கும். ஆனா, இதை பார்த்துகொண்டிருக்கும் நேயர்களில் முகத்தில் பாதிப்பு உண்டான வேதனையில் இருப்பவர்களுக்கு உண்மையில், எல்லாவிதமான வேதனைகளும் இருக்கும். எங்களிடத்தில் வருகிற ஊனமுற்றவர்கள் பல கோணத்தில் வடிவத்தில் இருப்பார்கள். எனக்கு காயம் உண்டான முதல் சில மாதங்கள் நா முக கண்ணாடிய பார்த்ததே கிடையாது.140 பவுண்ட் எடை இருந்த பெண் சீக்கிரத்தில் 80 பவுண்டா எடை குறைந்தேன். அந்த மருந்துகள் என்னுடைய பற்களை கருப்பாக்கினது.

வித்தியாசமான மருத்துகளின் தாக்கம் சிரங்குகளை உண்டாக்கினது. என்னுடைய தலை முடி உதிர ஆரம்பித்தது.

அதோடு, எனக்கு நினைவிருக்கிறது ஒருமுறை என்னுடைய பள்ளி தோழி ஒருத்தி - அவ நல்ல ஹாக்கி விளையாடுவாள், குண்டா இருப்பா, கடினமான, தோல்களை கொண்டவர் விளையாட்டு வீராங்கனை, நாங்க நல்ல நண்பர்களா இருந்தோம் - அவ என்ன பாக்க ஹாஸ்பிடலுக்கு வந்திருந்தா என் ஒருமுறை பார்த்த வுடனே அவ என்னோட படுக்கையின் கம்பிகளை இறுக பிடிச்சுகிட்டு தலையை அசைத்தபடி என்ன சொன்னான்னா, “நா உடனே போகணும்.” அப்பறம் வெளியில அவ கடுமையா வாந்திஎடுக்கிற சத்தம் எனக்கு கேட்டுச்சு. என்னோட சகோதரியிடம் நா உடனே ஒரு முக கண்ணாடிய கொண்டு வர சொன்ன, ஏன்னா நா எப்படி இருக்கிறேன்னு ரொம்ப நாளா நா பார்க்கவே இல்ல. நா எப்படி இருக்கேன்றத நா பார்த்தப்ப, என்னை எனக்கு அடையாளம் தெரியல. என்னுடைய கண்கள் ரொம்ப உள்ள போயிருந்தது. ரொம்பவும் ஒல்லியா நீண்டு, மங்கி போயிருந்தேன். அந்த ஸ்ட்ரைகர் பிரேம்ல படுத்துட்டு இருந்தேன், அப்ப நா ஏதோ வேற்று கிரகத்து மனுஷிபோல அப்படியே மாறிபோயிருந்தேன்.

எனக்கு நல்லா நினைவிருக்கு அதுதான் நா அழுத்தத்திற்குள் சென்ற முதல் முறை. அதுவரைக்கும் அழுத்தம் என்றால் எனன்னு எனக்கு தெரியவேயில்ல- வெள்ளிக்கிழமை இராத்திரி நண்பர்கள் வாராததால ஒன்னு ஆகல, கூடைபந்து மைதானத்தில் சதை

பிரண்ட போது இப்படி நடக்கல. ஆனா இப்ப உண்மையான மன அழுத்தத்திற்குள் உள்ளானேன். இப்ப உணர்ச்சி ரீதியாக மருத்துபோயிந்தேன். என்னால உணர்ந்துகொள்ள முடியாத ஒரு ஆழமான உணர்வுக்குள் உள்ளாகும் நிலையில் மூழ்கி கொண்டிருந்தேன். பல மாதங்கள் கடந்தன, எந்த உணர்வுகளும் இல்லாமல் போனது.

**ஆன்கர்பெர்க்:** உங்க இடுப்புல அறுவைசிகிச்சை நடந்தது, ஏன்னா உங்க எலும்புகள் தசையை குத்தி வெளியில வந்தது, மயக்க மருந்தே இல்லாம செய்தாங்க, ஏன்னா உங்களால எதையுமே உணர முடியாது. எதற்காக அந்த அறுவைசிகிச்சை தேவைபட்டதுன்னு சொல்லுங்க. இந்த மாதிரி இரண்டு ஆப்பரேஷன் நடந்திருக்கு.

**டாடா:** சரி, நா அதிகப்படியான எடையை இழந்ததினால் என்னுடைய இடுப்பு எலும்புகள் வெளியில வர ஆரம்பித்தது. என்னுடைய முன்பக்க உள்ள அன்பான எலும்புகள் என் தசைகளை குத்தி வெளியே வர இருந்தது, என்னுடைய தண்டுவட எழும்பும் அப்படியே இருந்தது. அதனால் தொடர்ந்து சில அறுவைசிகிச்சைகள் தேவை பட்டது... அவங்க ஒரு சுத்திய எடுத்து இடுப்பு பகுதியில் உள்ள இடுப்பு எலும்புகளை தட்டி அவற்றை சிராய்த்தார்கள் பிறகு எனது தண்டுவட எலும்பை அகற்றினார்கள். அப்பறம் என்னுடைய ஸ்ட்ரைகர் பிரேமில் இரண்டு வாரங்கள் தலை குப்புற படுத்திருக்க வேண்டிய நிலை உண்டானது, அந்த நேரத்தில்தான், இந்த காயங்களோடு சேர்ந்து, எனக்கு ஹாங் காங் காய்ச்சல் வந்தது.

என்னால் விவரிக்க முடியல - நீங்க முற்றிலும் முடமாக இருந்து, ஸ்ட்ரைகர் பிரேமில் கட்டப்பட்டிருக்க, ஒன்னுமே முடியாதுதா... இதுல எப்படி அசையமுடியும், சுத்தமா அசையவே முடியாது ஏன்னா ஸ்ட்ரைகர் பிரேம்ல கட்டப்பட்ட நிலையில், இப்ப அதோட இந்த காய்ச்சல், 2 வாரங்களுக்கு கீழ்நோக்கி படுத்திருக்கும் நிலை. அது எப்படின்னா, கேலிக்கூத்து மாதிரி இருந்தது.

**ஆன்கர்பெர்க்:** இதோடு இப்ப நிறுத்தி கொள்ளலாம், இப்போதும் ஒரு இடைவெளி எடுத்துக்கொள்வோம். ஏன்னா 2 ஆண்டுகள் பல அறுவைசிகிச்சைகளுக்கு பிறகு இனி ஒருபோதும் நடக்க முடியாது என்ற நிலையை உணருகிறீர்கள் இப்போது தேவனை பற்றிய கேள்விகளும் எதற்காக உங்களுக்கு இப்படி நடந்தது, உங்களுடைய நோக்கம் என்ன உங்க வாழ்விற்கு என்ன அர்த்தம் இருக்கு, எனபது போன்ற விஷயங்கள் உங்கள் கண்முன்பாக ஓடிக்கொண்டிருந்தது. உண்மையான போராட்டத்தில் இருந்தீர்கள், அந்த உபத்திரவத்தை பற்றி நீங்கள் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன், ஏன்னா இன்றைக்கு கேட்டுக்கொண்டிருக்கிற நேயர்களில் பலர், இதைபோன்ற உபத்திரவத்தில் நின்றுகொண்டிருக்கிறார்கள். இணைந்திருங்கள், மீண்டும் சந்திப்போம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. இப்போது நாம் பாசிக்கொண்டிருப்பது Dr. மைகேல் எஸ்லே மற்றும் ஜோனி எரிக்சன் டாடா வுடன். ஜோனி, தொடர்ந்து பார்த்திடலாமே. உங்களுடைய

யதார்த்த நிலையை நீங்கள் உணர்ந்த, அதே வேளையில் தேவனை பற்றி சிந்தித்தீர்கள் எதற்காக இந்த காரியங்களை அவர் அனுமதித்தார் என்று நினைத்தீர்கள். உங்களுடைய சிந்தனைகளை எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள், ஏன்னா நம்முடைய நேயர்களில் அநேகர் இந்த வேளையில் சொல்லிக்கொண்டிருக்கிற காரியம், “இந்த பிரச்சனை எனக்கு இருக்கிறது, அது எதுவாயிருந்தாலும் சரி, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், “இத நா கொஞ்சகூட எதிர்பார்க்கல,” அது மட்டுமல்ல, “நா, தேவனால் தள்ளப்பட்டது போல உணருகிறேன். தேவனால் மனவருத்தத்தோடு இருக்கிறேன் என்கின்றனர்.” இந்த உணர்வு உங்களுக்கு உண்டாயிருக்கிறதா?

**டாடா:** சரி, நா ஸ்ட்ரைகர் பிரேமில் இருந்தேன், அதாவது, 3 மணி நேரம் மேலே பார்த்தபடியாக, அப்பறம் ஒரு சிறிய துண்டினால் சேர்த்து கட்டின பிறகு, திருப்பிடுவார்கள், 3 மணிநேரம் கீழே பார்த்தபடி இருப்பேன். கீழே பார்த்தபடி இருக்கும் நேரத்தில், வாயில ஒரு குச்சிய வச்சுட்டு, வேதாகமத்தின் பக்கங்களை திருப்ப பயன்படுத்ஹ்டுவேன். யோபு புத்தகத்திலிருந்து ஆரம்பித்து புதிய ஏற்ப்பாடுகளுக்கு வந்தேன். ஆனா ஒன்று நிச்சயமா சொல்லணும், என்னன்னா அதெல்லாம், அதாவது சில வசனங்களை வாசிக்கும்போது யாக்கோபு 1:2 போல, “சிநேகிதரை போல, இதை ஏற்றுக்கொள்ளுங்கள், மிகுந்த சந்தோஷமாய், நீங்கள் சோதனைகளில் அகப்படும்போது சந்தோஷமாய் எண்ணுங்கள்.” அடடா!

வேறு இடத்தை திருப்பினால் அங்க, ரோமர் 5:3, "உபத்திரவங்களிலே மேன்மை பாராட்டுங்கள்." அதற்கு பிறகு பிளிப்பியர்ல பார்த்தா, o, அடக் கடவுளே! இதை ஈவாக கருத்திட வேண்டுமாம். "அவர் நிமித்தமாக பாடுபடவும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது." இந்த வசனங்களை பார்க்கும்போது இது தெரிந்தே நான் அனுபவித்த வேதனைகளை புறக்கனிப்பதுபோல் தெரிகிறது. என்னுடைய இருதயத்தை துளைக்கும் குண்டு போல, தோன்றுகிறதாயிருக்கிறது. இந்த அறுவைசிகிச்சை எல்லாம் முடிந்த சில நாட்களில், நா குணமடைய துவங்கியபோது, என்னை அந்த ஸ்ட்ரைகர் பிரேமிலிருந்து மாற்றி ஆறு படுக்கைகள் கொண்ட அறைக்கு மாற்றினார்கர் அங்க 5 பெண்கள் இருந்தார்கள், அதுதான் உண்மையான மருத்துவமனை படுக்கைகள். ஒரு இராத்திரி தேவனோடு சண்டை போட்டுகொண்டிருன்தேன். அதிகாலை 2 மணி, என்னுடன் அறையிலிருக்கும் எல்லாரும் தூங்கிக்கொண்டிருந்தனர், சத்தம்போட்டு அழ நினைத்தேன், ஆனா அதற்கு தைரியமில்ல, ஏன்னா என்னுடைய மூக்க துடைக்கவும் கண்ண துடைத்து விட அருகில் யாருமே இல்ல. சாதாரணமா நகர முடியாமல் இருப்பது எந்த விதத்திலும் வாதத்தினால் கதிகலங்கி நிர்ப்பதில் மோசமானது கிடையாது.

எனக்கு நினைவிருக்கிறது ஒரு இரவு, என்னுடைய தலையை தலையனையில் திருப்பி வைத்தேன், அப்ப அந்த 6 படுக்கை கொண்ட அறையின், வாசலில் ஒரு நபர் நிர்ப்பது போல தெரிந்தது.

அந்த நபர் மெதுவாக என்னுடைய படுக்கைக்கு அருகில் நெருங்கி வந்தார், கட்டிலின் கம்பிகளை இறுக பிடித்து கொண்டார், அவர், அந்த நேரத்தின் பெருமூச்சு விட்டேன், அது என்னுடைய உயர்பள்ளி தோழி, ஜேக்கி. இந்த தோழியுடன் தான் என்னுடை நண்பர்களையும் மில்க்சேக் மற்றும் ஹாக்கி மட்டைகளை பகிர்ந்துகொள்வேன். அவ அந்த படுகையின் கம்பிகளை இறுக பிடித்துகொண்டாள், நா சொன்னே, :ஜேக்கி, இப்ப உன்ன இங்க பார்த்தாங்கன்னா, நிச்சயமா உன்ன வெளியில துரத்திடுவாங்க. இங்க என்ன பண்ணீட்டு இருக்கேன்னு கேட்டேன்." உஷ், என்றால். அவ மெதுவா எழுந்து நின்று, கையிலிருந்து இரும்பினால், என்னுடைய படுக்கையை சுற்றியிருந்தத பாதுகாப்பு கம்பிகளை இறக்கினாள். அதற்கு பிறகு, உயர்பள்ளி மாணவிகள் தங்கள் படுக்கை ஆடைகளில் நடந்துகொள்வது போல, அவ என்னோட படுகையில் எனக்கு அருகில் வந்து படுத்துகொண்டாள், எனக்கு பக்கத்துல படுத்துகிட்டா, என்னுடைய கரத்தை பிடித்துகொண்டாள், என்னுடைய கைகள். அதை என்னால் உணர முடியவில்லை, ஆனா அந்த இருட்டுல அதை தூக்கி காண்பித்தால் அதனால் அந்த நிழலை என்னால் பார்க்க முடிந்தது, என்னுடைய கைகள் அவளுடைய கரங்களில் பிணைந்திருந்தது, அதை உயர்த்தினாள்.

அப்பறம் அவ தலையணையில் திரும்பி படுத்து, என்னுடைய காதுகளுக்கு சற்று அருகில் அவளுடைய உதடுகளை வைத்து, மெதுவாக மேச துவங்கினால், "வியாகுலம் நிறைந்த மனிதர்,

அவருடைய பெயர் என்ன, நமக்காக வந்த தேவனுடைய குமாரன்...” முழுசா சொல்ல முடியல. நற்பத்தினாலு ஆண்டுகளுக்கு முன் நடந்தது, அந்த நினைவுகள் என்னுடைய மனதிலும் இருதயத்திலும் பதிந்திருக்கிறது. “உடைந்த பாவிகளை மீட்க வந்தவர், ஹாலேலுயா, என்னவொரு இரட்சகர்.” இதை பற்றிய இன்னொரு விஷயமும் இருக்கிறது, இயேசுவை உண்மையானவர் என்று இது நிருபிப்பதாக இருந்தது. அது எப்படி இருந்ததென்றால் என்னுடைய இருதயத்தை துளைத்துகொண்டிருந்த தேவனுடைய வார்த்தை என்ற குண்டுகள் என் வீட்டை குறிவைத்தது. ஏன்னா அவ, ஒரு விதத்தில், என்னை கிறிஸ்துவின் அன்பில் திகைக்க செய்தால். அதனுடைய விளைவு எனக்கு இருந்த அனைத்து கேள்விகளும், அன்று இரவு எனக்கு தேவையான பதில் வராவிட்டாலும், அது முக்கியமானதல்ல என்ற எண்ணம் தோன்றியது. அவை அத்தியாவசியமானது என்று தோன்றவில்லை.

அதனால, அன்று இரவு அவ திரும்பி போனதும், எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உண்மையாய் என்னுடைய இருதயத்தை காத்துக்கொண்டது. நா நினைக்கிறேன், திரும்பி பார்க்கும்போது, அன்று இரவு நடந்த சம்பவம் தான் பெரும்பாலும் ஏன் என்று நாம் கேள்விகள் எழுப்பும்போது நமக்கு உண்டாகும் அனுபவமாக இருக்கிறது, ஆமாம், “தேவனே, ஏ இப்படி செய்தீங்க? அல்லது, “இது எனக்கு புரியவே இல்ல.” நாம பதிலை எதிர்ப்பார்ப்பதில்லை, ஏன்னா ஒருவேளை தேவன் அளிக்கும் பதில்கள் நம்மை

சமாதானப்படுத்திடும் என்று எனக்கு தோன்றவில்லை. என்னை பொறுத்தவரை, ஒருவேளை தேவன் எனக்கு உடனடியா பதில் கொடுத்திருந்தா, அது என்னுடைய சிறிய மூளைக்குள் கோடிக்கணக்கான அளவு உண்மையின் சாரத்தை ஊற்றுவதுபோல இருந்திருக்கும். அவை அனைத்தும் நான் புரிந்துகொண்டிருப்பேன் என்று என்னால் சொல்ல முடியாது. அதுமட்டுமல்ல, நாம காயமடையும்போது, எதிர்பார்க்கும் விஷயம் ஏற்றுக்கொள்ளப்படுவதுதான், அப்பா அனைத்து கொள்வது போன்றது, டாடி என்னை உத்தரவாதம் தருவார், "இதோ, இதோ, என் அருமை பிள்ளை," முதுகுல தட்டி கொடுப்பது, "அப்பா இங்கதா இருக்கேன், பரவாயில்ல, ஹனி." எல்லாம் சரியாயிடும். எல்லாம் சரியாயிடும்.

**ஆன்கர்பெர்க்:** உங்களுடைய வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் என்னவாகும் இதன் நோக்கம் என்ன என்பதை நீங்க எப்படி பிடித்ஹ்டு கொண்டீர்கள், ஏன்னா உங்களுடைய எண்ணம், நா என்ன செய்வேன் என்று இருந்ததல்லவா?

**டாடா:** அதாவது, அன்றைய இரவுக்கு பிறகு, ஒரு வித்தியாசமான விதத்தில், வாழ்வின் அர்த்தம் நோக்கம் எனபது எனக்கு முக்கியமானதாக அத்தியாவசியமானதாக தெரியவில்லை. நாம எல்லாரும் அனுபவிப்பதையே அனுபவித்தேன் என நினைக்கிறேன், நாம உபத்திரவத்தில் இருக்கும்போது, ஒரு காரியத்தை பற்றிக்கொள்ள விரும்புவோம், அதற்கு பிறகு, பரவாயில்லை என்று

தோன்றும். தேவன் ஒரு புரியாத புதிராக ஏதோ ஒரு மலை உச்சியில் உட்கார்ந்து தனது கட்டை விரலை ஆட்டிக்கொண்டு, ஆழ்ந்த சிந்தனையில் தியானம் செய்பவர் அல்ல. இல்லை, அவர் நம் அருகில் இருக்கிறார், அவர் நிஜமானவர். தனிப்பட்ட விதத்தில் பேசுவார். உங்களுடைய வேதனைக்கும் அவருக்கும் எட்டாத தூரம் கிடையாது. கிறிஸ்துவினிமித்தம் அவர் உங்களுக்கு சமீபமாய் உங்கள் நடுவில் இருக்கிறார். அதோடு, உண்மையில், வாழ்வின் நோக்கமும் அர்த்தமும் நிச்சயம் வெளிப்படும்.

**ஆன்கர்பெர்க்:** உங்க புத்தகத்தில் நீங்க எழுதியிருக்கும் விஷயம் எனக்கு பிடிக்கும், “நீங்கள் வேதனையை அனுபவிக்க தேவன் ஏன் அனுமதித்தார் என்று நீங்கள் அறிந்திட அவசியமில்லை. உண்மையில், தேவனுக்கு அது தெரியும்.” உங்களுடைய நம்பர் உங்களிடம் சொல்லியிருக்கிறார் எதனால் என்று அவர் சொல்வாரானால், அதாவது,அதனால் என்ன வித்தியாசம் உண்டாகப்போகிறது? என்னன்னா, நிச்சயமா அத தெரிஞ்சுக்க விரும்புறீங்களா? ஓகே, ஒரு நாளில் நிச்சயம் உங்களுக்கு தெரியவரும், ஆனா அவருக்கு தெரியும். இந்தமாதிரியான சில விஷயங்கள் உங்களுக்கு உதவியாக இருந்திருக்கிறது. இப்ப, நமக்கு இன்னும் சில நிமிடங்கள் இருக்கிறது, இந்த தலைப்புகளை பற்றி நாம் திரும்பவும் பேசிட இருக்கிறோம், ஏன்னா இப்பதா நாம அடித்தளத்திலிருந்து துவங்கியிருக்கிறோம். ஆனா எப்படி இந்த முடமான பெண், நடக்க முடியாத, தனது கரங்களை உபயோகிக்க

முடியாமல், இந்த கூட்டில் படுத்திருந்து,2 வருடங்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டவல், சக்கர நாற்காலியில்தான் வாழ்க்கை என்றிருந்த, அதாவது சக்கர நாற்காலியில் இருந்த இந்த பெண் எப்படி உலகமெங்கிலும் உள்ள சர்வதேச ஊழியத்தின் தலைவரானார், நீங்க வானொலியில் பிரசங்கம் செய்கிறீர்கள், ஒவ்வொரு நாளும் 1,000 அலைவரிசைகளில்  ஒளிபரப்பாகிறது? அதோடு கூட, “வீல்ஸ் பார் வால்ர்ட்” உள்ளது. நீங்க 48 தேசங்களுக்கு மேலாக பிரயானித்திருக்கிறீர்கள். இங்கிருத்து அங்க எப்படி போனீங்க?

**டாடா:** சரி, ஜான், இப்ப இங்கிருந்து அங்க தாவி போயிருக்கீங்க. ஒரு சிறு பிள்ளையாய் நான் அனுபவித்த வேதனைகளுக்கும் இப்ப முதிர்ந்தவளாக நான் செய்கிற காரியங்களுக்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. எனக்கு தெரிந்த ஒன்று, உலகமுழுவதும் சுமால் 1 பில்லியன் மக்கள் இயலாமல் இருக்கிறார்கள் அது எனபது சதவிகிதத்தினர் வறுமைக்கோட்டிற்கு கீழ் இருக்கிறார்கள், அவர்கள் நம்பிக்கையற்ற கைவிடப்பட்ட நிலையில் போராடிக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய முடக்கு வாதத்தினால் நா புரிந்துகொண்ட ஒரு காரியம், கிறிஸ்துவை அறிந்த பிறகு எனக்கு கிடைத்த மன அமைதியை நாம் விடாமல் பற்றிகொண்டிருக்கிறேன், அதிகமாய் யாருக்கு கொடுக்கப்பட்டதோ, அவர்களிடத்தில் அதிகமாக எதிர்ப்பார்க்கப்படும். ஓ, மை குட்நெஸ், ஜோனி, இந்த முடமான சரீரத்தோடு உனக்கு கிடைக்கும்

ஒவ்வொரு ஊழிய சந்தர்ப்பத்தையும் நீ விட்டுவிடாமல் பயன்படுத்திக்கொண்டு உன்னால் முடிந்த அளவு மற்றவர்களுக்கு உதவிடு.

அதாவது, இந்த வில் சேர்ல இருக்கிற இந்த வாழ்க்கையில் எனக்கு கிடைக்கும் ஒரே சந்தோசம் நிம்மதி என்னன்னா என்னை விட அதி வேதனையில் துவண்டு போயிருக்கும் மக்களுடைய வேதனையை நான் புரிந்துகொண்டு தேவைகளோடு இருப்பவர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு உதவுவதுதான் எனக்கு நிம்மதி. ஓ மை குட்நெஸ்! கிலேயாத்தின் தைலத்தை உங்களுக்கு தருகிறேன், அதை உங்களுக்கு நானே பூசுகிறேன். உங்களுக்கு என்னுடைய இயேசுவை பற்றி சொல்லுகிறேன் அது ஏதோவொரு விதத்தில் உங்களுக்கு உர்ச்சாகமளித்து, உங்கமை கைதூக்கிவிடும், அவர்கள் தழுவி, என்னை தூக்கி விட்டது போல தூக்கிவிட உதவிடுவேன், ஆஸ்பத்திரில இருந்தப்ப ஜேக்கி எனக்கு கைகுடுத்து தூக்கிவிட்டது போல. ஓ. இதை தான் இந்த 1 பில்லியன் மக்களுக்கு என்னால் செய்ய முடிந்த உதவி. எனக்கு இன்னும் கொஞ்ச நாள் தான் இருக்கு. ஓ, மை குட்நெஸ்! கர்த்தராகிய இயேசுவே,இதை செய்வதற்கு என்னை இன்னும் பெலமுள்ளவலாக நிற்க செய்யும், அப்படியிருந்தால் என் வாழ்க்கை உண்மையில் அர்த்தமுள்ளதாக இருந்திடும்.

இதுதான் இந்த உலகளாவிய சர்வதேச ஊழியத்தை செய்திட என்னை கொண்டுவந்தது என்று நான் நினைக்கிறேன். அதை நான்

விரும்பவில்லை. இதை நான் எதிர்பார்க்கவும் இல்லை. நா யாருடைய கதவையும் தட்டுகிறது கிடையாது. நா யாரிடமும் பணம் கேட்டது கிடையாது. ஆ, என்னை பற்றி புத்தகம் எழுதவோ, என் வாழ்க்கையை படம் எடுக்கவோ சொன்னது கிடையாது. இல்ல, இது எல்லாமே, தானாக நடந்தது. இதெல்லாம் என்னுடைய மடியில் வந்து விழுந்தது. ஆனா ஒன்றை அறிந்திருக்கிறேன் தேவன் எனக்கு அளித்த வேலையில்  நான் உண்மையுள்ள உக்கிரானக்காரியாக திகழ்ந்திடுவேன். அது ஒருவேளை இயலாமையில் இருப்பவர்களுக்கு உதவிடலாம் பெருவில், சீனாவில், கியூபா, தாய்லாந்து, ரோமானியா, உக்ரேய்ன், எங்கிருந்தாலும் சரி, அங்கு இருப்பேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆமாம். இதை பற்றி நாம் இன்னும் பல காரியங்களை பேசிட இருக்கிறோம். நேயர்களே, நாம் இப்போது பார்த்துகொண்டிருக்கிற காரியம் இதுதான் நீங்கள் கடந்து வரும் பாதையில் இருக்கும் உபத்திரவங்களில் உங்களை உற்ச்சாகப்படுத்தி,இயேசு பற்றி உங்களுக்கு எடுத்து சொல்லி எப்படி அவர் உங்கள் மீது கரிசனையோடு இருக்கிறார் என்பதையும் உங்கள் வாழ்வில் அவர் என செய்திடுவார் என்பதை எடுத்து சொல்லுகிறோம். என்னை பார்த்து ஒருவேளை, நீங்கள் கேட்கலாம், உங்கள நாங்க நம்பல. ஆனா ஜோனி சொல்றத நாங்க நம்ப விரும்புகிறோம். அடுத்த வாரம் நாம் மைகேளோடு பேசிட இருக்கிறோம். இவர்களும் அவர்களோடு இருப்பார்கள், உங்களை

போலவே, அதனால் தான் இவர்களை விருந்தினர்களாக அழைத்திருக்கிறேன். அடுத்த வாரம், இந்த தலைப்பை கேளுங்கள். மைக்கேல் பேச இருக்கும் காரியங்கள், எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும்போது நீங்க என்ன செய்வீங்க, உங்கள் கணவன் உங்களுக்கு உதவ முடியாத சமயத்தில், உங்க மனைவி உங்களுக்கு உதவ முடியாத நேரத்தில், உங்க உயிர் நண்பர் உங்களுக்கு உதவ முடியாத நிலையில், மருத்துவர்கள் உங்களுக்கு உதவ முடியாத சமயத்தில், உங்கள் வழக்கறிஞ்சர் உதவ முடியாத நிலையில், சபை உதவியாக இருக்க முடியாத நிலையில், நீங்களும் தேவனும் மட்டும் உங்கள் உபத்திரவ வேளையில் இருந்தால் என்னவாகும்? ஒகே, மைக்கேல் அவருடைய அனுபவத்தை பகிர்ந்திட இருக்கிறார். தவறாமல் நிகழ்ச்சியை பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம்

செய்திடுங்கள்.

# இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.